
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1009

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு


87

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

*“பத்திரிகை பலமில்லை, பண வசதியில்லை, எனினும் நமது பிரச்சாரம் பாயாத இடமில்லை. கல்லும் முள்ளும் நாம் தினசரி காணும் காட்சிகள். சுடுசொல்லும் கடுந்தாக்குதலும் நாம் அடிக்கடிபெறும் பரிசுகள். ஆயினும், நமது கழகம் வசதியில்லாத வாலிபனைப் போல ஏறுநடை போட்ட வண்ணம் நடந்து கொண்டுதான் இருக்கிறது- பல்லாயிரக் கணக்கான படைவீரர்கள் பவனி வர! இந்த பவனியைக் காண பாடுபடும் நமது கழக முன்னணி வீரர்களின் வியர்வையையும் சிரத்தையையும் வீராவேசத்தையும் எடுத்துக்காட்டியது தஞ்சை மாநாடு”*

1951-ஆம் ஆண்டு மார்ச் 3, 4 ஆகிய தேதிகளில் இன்றைய மயிலாடுதுறையில் நடைபெற்ற தஞ்சை மாவட்ட தி.மு.க. முதலாவது மாநாட்டைப் பற்றி, 18.03.1951 ‘திராவிட நாடு’ இதழ் வெளியிட்ட விவரிப்பு இது. ஊர் முழுக்க அலங்கார வளைவுகள், மாயவரம் சி.நடராசனின் முகம் பதித்த முத்தான முகப்பு, பெரிய பந்தல், இரவையும் பகலாக்கிய மின்சார விளக்குகள், அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரியின் படத்துடன் அமைக்கப்பட்டிருந்த மேடை, மாநாட்டுப் பந்தலுக்கு அருகிலேயே தொண்டர்களின் பசியாற்றிட சமையல் கூடம் என அன்றைய காலகட்டத்தில் எண்ணிப் பார்க்க இயலாத அளவுக்கு ஏற்பாடுகள் பிரமாண்டமாக இருந்தன.

காஞ்சி கல்யாணசுந்தரம் மாநாட்டைத் தொடங்கிவைத்தார். வரவேற்புரையாற்றிய கே.கே.நீலமேகம், கழகம் தொடங்கப்பட்ட




# வடநாட்டு ஆதிக்கம் எதிர்த்த மாயவரம்!

ஒன்றரை ஆண்டுக்காலத்தில் 11 மாநாடுகள் நடத்தப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டுச் சொன்னபோது, ஒட்டுமொத்த கூட்டமும் கரவொலி எழுப்பி அகமகிழ்ந்தது.

மேலும், “உலக யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது எதிரி விமானங்கள் விண்ணில் பறந்து கொண்டிருந்த நேரத்தில் கூட, 16 அவுன்ஸ் அரிசி கொடுத்தது வெள்ளை ஏகாதிபத்தியம். இப்போது சுதந்திரம் வந்துவிட்டது என்று விழா நடத்திவிட்டு, படிப்படியாக அரிசி பங்கீட்டைக் குறைத்து 7 அவுன்ஸ் அரிசி கொடுக்கிறது வடநாட்டு ஏகாதிபத்தியம். அதுவும் சில ஊர்களில் கிடைப்பதில்லை. மக்கள் பட்டினியால் உயிர் விடுகிறார்கள். உணவு, உடை முதலிய எல்லாவற்றுக்கும் வடநாட்டையே எதிர்பார்த்து நிற்கும் நிலையில் இருக்கிறது நம் மாகாண சர்க்கார்” என்று வரவேற்புரையில் வடநாட்டு ஆதிக்கத்தைத் தோலுரித்தார் கே.கே.நீலமேகம்.

அன்றைய சென்னை கார்ப்பரேஷனின் கவுன்சிலராக இருந்த என்.ஜீவரத்தினம் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். “நாம் இப்படி மடமையிலும் வறுமையிலும் வாடி வதைவானேன்? இது என்ன எஸ்கிமோக்கள் வாழும் பனிக்கட்டி பரப்பா? மனித சஞ்சாரம் இல்லாத ஆப்பிரிக்கக் காடுகளா? மனித இனம் உருவான காலத்தில் இருந்து அறிவிற்கு ஆதாரமாய் இருந்த அறிஞர்கள் பிறந்த நாடு என்று பிறமொழியாளரும் பிற தேசத்தாரும் சரித்திர வாயிலாகச் சான்றுகள் கூறக்கேட்டு களிப்படைகின்றோமே! இன்று ஏன் நாம் இந்த நிலையில் தாழ்ந்தோம்? வெள்ளையன் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் உலக நாகரிகம் பரிமாறப்பட்டதால், மனித உரிமையின் உணர்ச்சி ஊடுருவிப் பாய ஏதுவாக இருந்தது. அதைத் தெளிவாக உணர்ந்த ஆரியம் இப்போது இந்து மதத்தின் பெயரால் தனக்கான ஆதிக்கத்தை நிலைநிறுத்த சட்டதிட்டங்களைக் கட்டுப்படுத்தியது” என்று தனது தலைமையுரையில் நாட்டின் அன்றைய நிலைமையைப் படம்பிடித்துக் காட்டினார் என்.ஜீவரத்தினம்.

2 நாட்களிலும் எண்ணற்றோரின் கருத்து மழை, இசை நிகழ்ச்சிகள், ‘நீதிதேவன் மயக்கம்’ நாடகம் என களைகட்டியது மாயவரம் மாநாடு.

**...கூட்டம் திரளும்**

## தமிழ்நாடு முறியடிக்கும்!

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கைக்கு (SIR), எதிராக தி.மு.கழகத்தின் தலைமையில் தமிழ்நாட்டின் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரண்டுள்ளன. பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணியில் இருக்கும் கட்சிகள் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியலின் அபாயம் அறியாமல், பா.ஜ.க. தரும் அழுத்தத்தால் அமைதி காக்கின்றனர் அல்லது ஆதரிக்கின்றனர். இந்த நிலையில், கடந்த 02.11.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், சென்னையில் நடைபெற்ற அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, தமிழ்நாட்டில் ஒரு கோடி வாக்காளர்களை நீக்கி, தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை சீர்குலைப்பதற்கு திட்டமிட்ட சதி நடைபெறுவதாக, அதிர்ச்சியான தகவலை வெளிப்படுத்தியுள்ளது.

‘சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் பணிக்காக, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வரும்போது, வாக்காளர் ஒவ்வொருவரும் வீட்டில் இருப்பது கட்டாயம் எனக் கூறப்படுகிறது. அவர் ஒவ்வொரு வீட்டுக்கும் குறைந்தது மூன்று முறை சென்று சரி பார்க்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு அவர் வரும்போது வாக்காளர் இல்லை என்றால், அவருடைய பெயர் சேர்க்கப்படுவதற்கு வாய்ப்பில்லை. இது கிராமப்புறத்தில் இருக்கிற கூலித் தொழிலாளர்கள், பிற மாவட்டங்களுக்கும், பிற மாநிலங்களுக்கும் புலம்பெயர்ந்து சென்று வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் மிகப்பெரிய சிக்கலாக இருக்கும்.

அரபு நாடுகளில் சென்று வேலை செய்யும் முஸ்லிம்கள் பலரும் இந்தக் கணக்கெடுப்பின்போது, ஊருக்குத் திரும்ப முடியாத காரணத்தால் அவர்களும் இந்தக் கணக்கெடுப்பில் விடுபடக்கூடும். இந்த நிலையில், செலவு செய்து வாக்காளர் பட்டியலில் தனது பெயரைச் சேர்ப்பதற்கு அவர்கள் முயற்சி செய்வார்கள் என்று கூற முடியாது. எனவே பெரும்பாலோர் வாக்காளர் பட்டியலில் விடுபடுவதற்கு வாய்ப்பு உள்ளது’ என கருத்து தெரிவித்துள்ளது விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. தேர்தல் ஆணையம் வாக்காளரின் குடியுரிமையைத் தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றது அல்ல என உச்சநீதிமன்றத்தில் வழக்கு உள்ள நிலையில், தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கை தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தலில் குழப்பத்தை உருவாக்கவே செய்யும். குறுக்கு வழியில், பா.ஜ.க.வுக்கு வழி அமைக்கும் இந்நடவடிக்கையை தமிழ்நாடு நிச்சயம் முறியடிக்கும்!

## ஃப்ளாஷ்பேக்



### அம்பத்தூர் வருகை தந்த தலைவர்!


ஆ.இரா.அருண்

2004-ஆம் ஆண்டு, நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்துக்காக அம்பத்தூர் நகரத்துக்கு தானைத்தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்தபோது, அப்போதைய நகரச் செயலாளர் அண்ணன் ஆ.இராமநாதன் வரவேற்புரையாற்றி, கழகத் தலைவரை வரவேற்றார். உடன் நகர மன்றத் தலைவர் எம்.எம்.கிருஷ்ணமூர்த்தி இருந்தார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

**– ஆ.இரா.அருண்,**
**மாவட்டப் பிரதிநிதி,**
**அம்பத்தூர் வடக்குப் பகுதி, சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பாசறை படிப்பறை


கௌதம் ராஜ்

87

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

பேரறிஞர் அண்ணா மறைந்த செய்தி கேட்ட தந்தை பெரியார், ‘அண்ணா மறைந்தார் அண்ணா வாழ்க!’ என்று தலைப்பிட்டு ஒரு அறிக்கையை எழுதி வெளியிட்டார். தனயனுக்கு தந்தை செலுத்திய ஆகச்சிறந்த அஞ்சலி அது. அதுபோலவே தந்தை பெரியார் மறைந்த போது, அவரது அறிவுப் பணிகளைத் தங்கள் வாழ்நாள் முழுவதும் எவ்விதத் தொய்வும் இன்றி மேற்கொண்ட முன்னோடிகளாக சிலரைக் குறிப்பிடலாம், அதில் முதன்மையானவர் அறிஞர் வே.ஆனைமுத்து. அவரது நூற்றாண்டு நிறைவும் அவர் பணிகளைப் போலவே மிக சிறப்பாக நடந்தேறியுள்ளன.

தன் வாழ்நாள் முழுவதும் பெரியாரியம், பொதுவுடைமை, சமூகநீதி, இடஒதுக்கீடு போன்ற கொள்கைகளை உயர்த்திப் பிடித்த அறிஞர் வே.ஆனைமுத்து அவர்களது வாழ்வையும் பணியையும் உள்ளடக்கமாகக் கொண்டு வெளியாகியிருக்கிறது ‘அறிஞர் வே.ஆனைமுத்து நூற்றாண்டு மலர்’. மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியினர் இம்மலரை மிகச்சிறப்பாக வெளியிட்டுள்ளனர்.




70-க்கும் மேற்பட்ட அறிஞர் பெருமக்களின்

# வாழ்க பெரியாரியம்!

கட்டுரைகள், அரிய பல புகைப்படங்கள், ஆனைமுத்து அவர்களின் மேற்கோள்கள், அவர் நடத்திய இதழ்கள் மற்றும் நூல்களின் அட்டைப்படங்கள் என அறிவை வசப்படுத்தும் அம்சங்களுடன் வெளியாகியிருக்கிறது இம்மலர். 1974-ஆம் ஆண்டு ‘பெரியாரின் சிந்தனைகள்’ நூல் 3 தொகுதிகள் வெளியீட்டு விழாவில் பங்கேற்று, தமிழ்நாடு முதலமைச்சராக முத்தமிழறிஞர் கலைஞர் ஆற்றிய உரையும், அப்போது எடுக்கப்பட்ட புகைப்படமும் இம்மலரின் சிறப்பம்சங்களில் ஒன்று.

சிறுவயது முதலே அவர் மேற்கொண்ட கொள்கை சமர்களை, இதில் படிக்கும்போது ஆச்சர்யமாக இருக்கிறது. 1957-ஆம் ஆண்டு அரசியல் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் பங்குகொண்டு சிறைதண்டனை அனுபவித்தது, ‘குறள் முரசு’ என்ற இதழை மாத இதழாக வெளியிட்டது, ‘திராவிட நாடு’, ‘விடுதலை’ போன்ற இயக்க இதழ்களில் கட்டுரை எழுதியது, ‘சிந்தனையாளன்’ எனும் மாத இதழை திருச்சியில் தொடங்கி, தொடர்ந்து நடத்தியது, அகில இந்திய அளவில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு கிடைத்திடச் செயல்பட்டது, பெரியார் சிந்தனைகளை முதலில் 3 தொகுதிகளாகவும் பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு 9,300 பக்கங்களில் 20 நூல்களாகவும் வெளியிட்டதென அவரது அனைத்துப் பணிகளும் மலைப்பை ஏற்படுத்துபவை. இதன் பின்னணியில் இருக்கும் உழைப்பையும் உறுதியையும் இம்மலர் மிக சிறப்பாக கடத்தியுள்ளது.

அறிஞர் வே.ஆனைமுத்து தமிழ்நாட்டளவில் மட்டுமின்றி, இந்திய அளவில் பெரியாரிய சிந்தனைப் பரவலைச் சீரிய முறையில் மேற்கொண்டார் என்பதை இதிலுள்ள பெரும்பாலான கட்டுரைகள் சுட்டிக் காட்டுகின்றன. தனிப்பட்ட மனிதராகவும் அவர் பெரியாரிய கொள்கைகளை எவ்வளவு உறுதியாகக் கடைபிடித்தார் என்பதையும் அறிய முடிகிறது. தன்மான இயக்கம், திராவிடர் கழகம், பெரியார் சம உரிமைக் கழகம், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி என அவரது இயக்கப் பணிகளின் பரிணாமத்தை மிக நேர்த்தியாக இம்மலர் பதிவு செய்கிறது.

பெரியாரியத்தை உயர்த்திப் பிடித்து பணியாற்ற விரும்பும் அனைவரும், அவசியம் வாசிக்க வேண்டியது அய்யா வே.ஆனைமுத்து அவர்களது நூற்றாண்டு மலர்.

**...வாசிப்போம்.**

## கழக வரலாறு

### கல்லக்குடி வீரருக்கு பிரமாண்ட வரவேற்பு!

1953-ஆம் ஆண்டு, ஜூலை மாதத்தில் மும்முனைப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, கடுங்காவல் தண்டனை பெற்ற கலைஞர் நவம்பர் 21-ஆம் தேதி விடுதலை செய்யப்பட்டார். திருச்சி மத்திய சிறை வாசலில், கலைவாணர், ஏ.கோவிந்தசாமி இருவரையும் கழகத்தினர் மாலையிட்டு வரவேற்றனர். திருச்சி, திருவாரூரில் பாராட்டுப் பொதுக்கூட்டங்களுக்குப் பின்னர், நவம்பர் 29 ஆம் தேதி சென்னை வந்தவருக்கு பிரமாண்ட வரவேற்பு அளித்தனர் கழகத்தினர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.